[20th November 1963

அரிசன நலப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு மாதாந்திர சம்பளம், பிரயாணப்படி இவைகள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. இதை தவிர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கும் காலதாமதம் ஏற்படக் கூடாது என்று அரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் எல்லா ஜில்லா அதிகாரிகளுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக எந்த இடத்திலாவது காலதாமதம் ஆகிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், தனியாக லேபர் பள்ளிகள் என்று வைத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா ? இதையும் பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுத்துவிட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு தனிச் சலுகைகள் காட்டவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்விதம் தனியாக் வைக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதிகள்

* 333 கேள்வி—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் அரிசன மாணவ மாணவியருக்காக தங்கும் விடுதிகள் எங்கெங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

(இ) இதற்குச் செலவிடப்படும் உத்தேச தொகை எவ்வளவு ?

(உ) அரிசனங்களில் எல்லா பிரிவினருக்கும் இதில் இடம் கொடுக்கப்படுமா ?

(எ) ஒவ்வொரு பிரிவினருக்கும் எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Proposals for the construction of Government Boys Hostels at Tiruvannamalai in North Arcot district and at Ootacamund in the Nilgiris district are under the consideration of the Government.

(*b*) The probable expenditure for the construction of buildings for the Government Boys Hostel, Tiruvannamalai is estimated at Rs. 1.50 lakhs. The plans and estimates for the construction of Government Boys Hostel at Ootacamund have not yet been received by the Government.

(*c*) Yes. Seventy-five per cent of the total strength is reserved for scheduled castes in the hostels mainly intended for Harijan pupils.

(*d*) No separate percentage of seats is allotted for each sect among scheduled castes for admission in the Government Hostels in the State.

20th November 1963]

திரு. க. ர. நல்லசிவம்: அரிசனங்களில் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் அருந்ததியர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷமாக ஏதாவது சலுகைகள் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இவர்களுக்கென்று தனியாக எந்த சலுகையும் காட்டுவதற்கில்லை. ஏழை குழந்தைகளுக்குப் பொதுவாக என்னென்ன சலுகைகள் காண்பிக்கப்படுகிறதோ அவைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

அடிநிலத் தண்ணீர் வளம்

* 334 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தின் அடிநிலத்தில் உள்ள தண்ணீர் வளம் பற்றி மாவட்டவாரியாக சர்வே செய்ய மாநில சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளனரா?

(இ) அப்படியானால், விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b): Reports received by Government from many districts showed that the sub-soil water table has been gradually going down due to the increasing number of deep wells and the installation of pumpsets. The need for a scientific survey of groundwater resources in this State was therefore felt and accordingly a scheme for the groundwater exploration and survey in this State was sanctioned, involving a recurring expenditure of Rs. 7.75 lakhs and a non-recurring expenditure of Rs. 5.71 lakhs. The scheme is being implemented by the Director of Industries and Commerce. In view of the difficulties involved in securing the necessary technical personnel and the required foreign exchange for the purchase of drills, the scheme is in a preliminary stage.

திரு. க. ர. நல்லசிவம்: இது சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வேண்டிய அளவுக்கு டெக்னிக்கல் அறிவு பெற்றவர்கள் இந்தத் துறையில் இல்லாததின் காரணமாக போதிய அளவுக்கு வேலை நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அதை தவிர்க்கின்றவகையில் இந்த ராஜ்யம் விவசாயத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்த ராஜ்யம் என்று கருதி, அடித்தளத்திலுள்ள தண்ணீரை கண்டுபிடிக்கின்ற வழிக்கு, விசேஷமாக இங்கிருந்து இந்தத் துறையில் வேலை செய்கின்றவர்களில் சிலரை வெளி நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜியாலஜிக்கல் சர்வே பயிற்சி அவ்வளவு சுலபமாகக் கொடுக்க முடியாது. நீண்ட நாள் அனுபவம் தேவை. இப்போது ஸ்டேட் ஜியாலஜிக்கல்